

# அறிவை வளர்த்ததும், ஆதிக்கம் எதிர்த்ததும் திராவிட இயக்கம்!

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் எட்டாவது அமர்வில் ‘எழுத்து என்னும் ஆயுதம் ஏந்தி...’ என்ற தலைப்பில், எழுத்தாளர் இமையம் அவர்கள் ஆற்றிய உரை :**



**இமையம்**
எழுத்தாளர்

“இன்று மிக மிக மிக முக்கியமான ஒரு நாள். காரணம், தி.மு.க. ஆரம்பிக்கும்போது நான் பிறக்கவில்லை. தி.மு.க. 75-வது ஆண்டில் நடைபெறக்கூடிய இந்த அறிவுத் திருவிழாவில் பங்கேற்றுப் பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுக்கு என் நன்றி.

## நான்காவது படை

தி.மு.க.வின் நான்காவது தலைமுறை படை இது. அண்ணா காலத்தில் ஒரு படை இருந்தது. கலைஞர் காலத்தில் ஒரு படை இருந்தது. தளபதி அவர்களின் காலத்திலும் படை இருக்கிறது. இப்போது உதயநிதி அவர்களின் காலத்திலும் ஒரு புதிய படையை உருவாக்கி, இந்த கழகத்தினுடைய கொள்கைகளை, கோட்பாடுகளை இன்னும் நூறு ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற முனைப்போடு, இந்த அறிவுத் திருவிழாவை அவர் நடத்துகிறார்.

ஐம்பது ஆண்டுகளாக தி.மு.க.வுக்குத் தொடர்புடையவனாக நான் இருக்கிறேன். இந்த இரண்டுநாள் கருத்தரங்கை நான் பார்த்தபோது பழைய தி.மு.க. மாநாடுகள் நினைவுக்கு வந்தன. பழைய தி.மு.க. மாநாடுகள் எல்லாம் இரண்டு நாள்கள், மூன்று நாள்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, திரும்ப நாம் நம்முடைய மரபை மீட்டெடுக்கிறோம்.

தி.மு.க. என்று ஒன்று உருவாகி இருக்காவிட்டால், நாம் இன்று பேசுகிற மொழி இருந்திருக்காது, நாம் இன்று எழுதுகின்ற இலக்கியம் இருந்திருக்காது, நாம் பார்க்கின்ற சினிமா இருந்திருக்காது, நாம் நடத்துகின்ற நாடகம் இருந்திருக்காது, இன்று நாம் பேசுகிற ஊடக மொழி இருந்திருக்காது.

## ஏன் கல்வியை இழந்தோம்?

தொல்காப்பியம் கி.மு. 711-ல் எழுதப்பட்டது. அப்போது, எல்லாச் சமூகத்தினருக்கும் கல்வி கிடைத்திருக்கிறது. சங்க காலத்தில் 42 பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அதேபோன்று நீதி இலக்கிய காலத்திலும் திருவள்ளுவர் எழுதியிருக்கிறார். திருவள்ளுவர் சமூகத்தில் கடைநிலையில் இருந்தவர். ஆதிதிராவிடர் சமூகத்துக்கும் கீழான ஒரு சமூகத்தில் பிறந்தவர்தான் திருவள்ளுவர். அவருக்கு அந்தக் காலத்தில் கல்வி கிடைத்திருக்கிறது, பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் கல்வி அளித்த சமூகம் எப்போது கல்வியை இழந்தது? பெரிய பெரிய கோயில்கள் வரும்போது, கோயில் கருவறையின் இருட்டில் நம்முடைய அறிவும் பண்பாடும் நாகரிகமும் படிப்பும் எப்போது அடைக்கப்பட்டதோ, அன்றுதான் யாரும் படிக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட்டது, நமக்கு மட்டுமல்ல, இந்த நிலையை ஏற்படுத்திய பிராமண சமூகத்தினருடைய பெண்கள்கூட படிக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்கினார்கள். நீண்டகாலத்துக்குப் பிறகு, தமிழ்நாட்டில் அனைவரும் படிக்க வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை நீதிக்கட்சிதான் எடுத்தது. கிட்டத்தட்ட 1,300 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த நூறு ஆண்டுகளாகத்தான் நாம் கல்வியைப் பெற்றிருக்கிறோம். இந்த அறிவை வளர்த்தெடுப்பதற்காக நம்முடைய திராவிட இயக்கம் 200-க்கும் மேற்பட்ட பத்திரிகைகளை நடத்தியிருக்கின்றன.



## திராவிட இதழ்கள்

1916-இல் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைதான் ‘ஜஸ்டிஸ்’. அதன் பின்பு, பெரியார் அவர்கள் 1925-இல் ‘குடி அரசு’ தொடங்குகிறார். ‘ரிவோல்ட்’ எனும் பத்திரிக்கையை 1928-இல் தொடங்குகிறார். ‘புரட்சி’ என்கிற இதழை 1933-இல் தொடங்குகிறார். ‘பகுத்தறிவு’ 1934-இல் தொடங்கப்பட்டது. ‘விடுதலை’ பத்திரிகையை, பெரியார் 1935-இல் தொடங்கி நடத்துகிறார். அண்ணா அவர்கள் 1942-இல் ‘திராவிடநாடு’ இதழைத் தொடங்குகிறார். இந்த ‘திராவிட நாடு’ இதழில்தான் கலைஞர் அவர்கள் தன்னுடைய முதல் கதையை எழுதுகிறார். அண்ணா ‘நம் நாடு’ இதழை 1956-இல் தொடங்கி நடத்தினார். கலைஞர் ‘முரசொலி’யைத் தொடங்கினார். பாரதிதாசன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘குயில்’. முருகு சுப்பிரமணியன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘பொன்னி’. பேராசிரியர் க.அன்பழகன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘தென்னகம்’. இரா.நெடுஞ்செழியன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘புது வாழ்வு’ மதியழகன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘தாய்நாடு’. சிறுகதை மன்னன் என்று போற்றப்பட்ட எஸ்.எஸ்.தென்னரசு நடத்திய பத்திரிகையின் பெயர் ‘தென்னரசு’. கண்ணதாசன் நடத்திய பத்திரிகையின் பெயர் ‘தென்றல்’. இப்படி 200-க்கும் மேற்பட்ட இதழ்களை நடத்தியிருக்கிறார்கள்.

## மாற்றங்கள்

பார்ப்பனப் பத்திரிகைகளில் விருட்சம், வாத்ஸல்யம், நமஸ்காரம் என்றெல்லாம் எழுது வார்கள். நாம் ‘நமஸ்காரம்’ என்பதை மாற்றி, ‘வணக்கம்’ என்ற சொல்லைக் கொண்டுவந்தோம். ‘ஸ்ரீமான்’, ‘ஸ்ரீமதி’ என்பது இன்றைக்கு திருமதி, செல்வி, திரு என்று மாறியிருப்பதற்கு காரணம் திராவிட இயக்கம். திராவிட எழுத்தாளர்கள் வந்த பிறகுதான் இலக்கியத்தில் விளிம்புநிலை மக்கள் கதாபாத்திரங்களாக வந்தார்கள்.

அண்ணா ‘பேய் ஓடிவிட்டது’ என்று ஒரு கதை எழுதியிருப்பார். ஓர் ஆணும் பெண்ணும் காதலிப்பார்கள். தங்கள் காதல் வெளியில் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக அந்தப் பெண், பேய் வந்ததைப்போல் நடிப்பாள். ‘ஏன் பார்ப்பனப் பெண்களுக்குப் பேய் பிடிப்பதில்லை?’ என்ற முக்கியமான கேள்வியை அண்ணா அந்தச் சிறுகதையில் எழுப்பியிருப்பார்.

அதேபோல் கலைஞர் எழுதிய ‘குப்பைத்தொட்டி’ என்ற சிறுகதையும் முக்கியமானது. தன் மீது வந்து விழும் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு குப்பைத்தொட்டி பேசுவதாக அமைந்திருக்கும் அந்தச் சிறுகதை. குப்பைத் தொட்டியின் வழியாக இந்தச் சமூகத்தை அணுகி, இந்த சமூகத்தில் என்னென்ன விதமான அழுக்குகள் இருக்கின்றன என்பதை கலைஞர் விளக்கியிருப்பார்.

அதேபோல் இராம அரங்கண்ணல் எழுதிய ‘ஒரு அணா’ என்னும் சிறுகதையும் முக்கியமானது. ஒரு அணா சம்பாதிப்பதற்கு எப்படி கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதை அந்தக் கதை விளக்கியிருக்கும். ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் ‘ராஜ்ஜியத்தின் திருமணம்’ சிறுகதை சுயமரியாதை திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்தும். ராதா மணாளன் எழுதிய ‘குந்தமன் துறவு’ சிறுகதை, புத்தர் எவ்வாறு அரச வாழ்க்கையைத் துறந்து துறவு வாழ்க்கைக்குச் சென்றார் என்பதைப் பற்றிய கதை. தமிழ்நாட்டில் கலைஞருக்குப் பிறகு, பாரதிதாசனுக்குப் பிறகு சாகித்திய அகாடமியால் ‘இந்திய இலக்கிய சிற்பிகள்’ என்று புத்தகம் போட்ட திராவிட இயக்க எழுத்தாளர் டி.கே.சீனிவாசன். அவர் எழுதிய ஒரு சிறுகதையில் பெரியாரே ஒரு கதாபாத்திரமாக வருவார். சிறுகதை மன்னன் என்று போற்றப்பட்டவர் எஸ்.எஸ்.தென்னரசு. முரசொலி மாறனே 16 சிறுகதைகள் எழுதியிருக்கிறார். தில்லை வில்லாளன், திருச்சி செல்வேந்திரன் என்று ஒரு நீண்ட பட்டியலைப் போடலாம்.

இந்த திராவிட இயக்க எழுத்தாளர்களுடைய கதைகளில் மூடநம்பிக்கை இருக்காது, பிற்போக்குத்தனம் இருக்காது. இவர்களுடைய கதைகளில் என்னென்ன வார்த்தைகள் எல்லாம் இருக்காது தெரியுமா? என் தலையெழுத்து, ஆண்டவன் விதித்தது, கடவுள் விட்ட வழி, கர்ம வினை, முன் ஜென்ம வினை, பாவம் புண்ணியம், என் கையில என்ன இருக்கு - இந்த வார்த்தைகள் எல்லாம் இருக்காது.

இங்கே நான் திராவிட இயக்க எழுத்தாளனாக, திராவிட இலக்கியத்தின் அடையாளமாக நிற்கிறேன். எம்.பி. கனிமொழி அவர்கள் திராவிட இலக்கியத்தின் அடையாளமாக இருக்கிறார். ப.திருமாவேலன் சிறந்த கட்டுரையாளராக இருக்கிறார். மனுஷ்யபுத்திரன் உலகம் அறிந்த ஒரு சிறந்த கவிஞர். சல்மா, தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்மகன் என்று இப்போதும் திராவிட இயக்க எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இப்படி பல்வேறு எழுத்தாளர்களைக் கொண்ட பெரும் இயக்கத்தை எப்போதும் நினைவுகூர்வோம்!”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**




மின்னங்காடி பதிப்பகம் :
**உதயமாகிறான் உதயசூரியன்**

தலித் முரசு :
**ஜாதியை அழித்தொழிக்கும் வழி**

தளபதி பதிப்பகம் :
**நீதிக்கட்சி வரலாறு**

தமிழ்மண் பதிப்பகம் :
**அண்ணா அறிவுக்கொடை**

அலைகள் வெளியீட்டகம் :
**சென்னை பெருநகர தொழிற்சங்க வரலாறு**